புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2053 செப்டம்பர் 08, 2022 புரட்சி 21 முழக்கம் 34 விலை: ரூ.3.00

## பயிலரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கினார்

# ஆர்.எஸ்.எஸ். முன்னோடிகளின் வரலாறு

*திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக, "யார் எதிரிகள்" என்ற தலைப்பில் 31.07.2022 அன்று சென்னை அம்பத்தூர் தாய்த் தமிழ் பள்ளியில் நடைபெற்ற பயிலரங்கில், ஆர்.எஸ்.எஸ் முன்னோடி பார்ப்பனர்களான திலகர், சாவர்க்கர், விஜயராகவாச்சாரியார் ஆகியோரின் பார்ப்பனிய சனாதன வரலாறுகளை விளக்கி கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை:*

"யார் எதிரி?" என்பது தான் நிகழ்வின் தலைப்பு என்றார்கள். யார் எதிரி என்று சரியாக தீர்மானிக்காத இயக்கங்கள் தான் திசை மாறிச் சென்று கொண்டிருக்கின்றன. சில இயக்கங்கள் உண்மையான எதிரிகளை அதாவது பகை முரண்களை விட்டு விட்டு நட்பு முரண்களை எதிர்ப்பதை தமிழ் தேசியத்தின் பெயரால் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் நமது எதிரிகளை அடையாளம் கண்டு கொள்ளத் தான் இந்த தலைப்பு. அவர்கள் சரியாக வகைப் படுத்தி இருக்கிறார்கள். Bunch of Thoughts (ஞான கங்கை) என்ற நூலில் கோல்வாக்கர் தெளிவாக மூன்று எதிரிகளை வகைப்படுத்தியுள்ளார்.

1) இஸ்லாமியர்கள், 2) கிறிஸ்தவர்கள், 3) கம்யூனிஸ்டுகள். தற்போது மோடி ஆட்சிக்கு வந்த பின்னர், 2014இல் "உலக இந்துக்கள் மாநாடு" என்று ஒரு மாநாட்டை கூட்டி னார்கள். இந்த மாநாட்டை 'அசோக் சிங்கால்' இருந்து நடத்தி வைத்தார். அந்த மாநாட்டில் புதிதாக இரண்டு எதிரிகளை சேர்த்துக் கொண் டார்கள். அதில் முதலில் மார்க்ஸிஸ்ட், அடுத்தது மிஷனரிஸ், மெக்கா லேயிஸ்ட், மெட்டீரியலிஸ்ட், முஸ்லிம்ஸ் என்று எதிரிகளை அய்ந்து வகைப்படுத்தினார்கள். இதை அவர்கள் அய்ந்து 'M' என்று குறிப் பிட்டார்கள். நான்காவதாக வைத்திருந்தாலும் 'மெட்டீரியலிஸ்ட்'களைத் (நாத்திகர்கள்) தான் மிக மோசமான எதிரிகள் என்று குறிப்பிட் டார்கள். இறுதியாக வைத்திருந்தாலும் ஆபத்தான எதிரிகள் என்று 'முஸ்லிம்கள்' அய் வைத்திருந்தார்கள்.

அறிவியல் அறிவு என்பது அவர்களின் மதத்தை, வர்ணாஸ்ரமத்தை கேள்வி கேட்க வைக்கிறது, எனவே 'மெக்காலே' கல்வி கற்றவர்களே எதிரிகள் என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். "மெக்காலே மீது இவர்களுக்கு ஏன் இவ்வளவு வெறுப்பு என்றால், இந்த நாட்டில் இருக்கும் ஒட்டுமொத்த இலக்கி யங்களை தொகுத்து பார்த்தாலும், அய்ரோப்பிய நாட்டு தொடக்கப் பள்ளி மாணவனின் அலமாரியில் உள்ள நூல்கள் கொடுக்கும் அறிவியலைக் கூட கொடுப்ப தில்லை" என்று அவர் எழுதியிருக்கிறார்.

அவர் சமஸ்கிருதம், பாரசீகம் என்ற இரண்டு மொழிகளை குறிப்பிடுகிறார். அடுத்ததாக புராணங்களை விமர்சிக்கிறார். சமத்துவம் என்பதையே அவர்கள் முழுமையாக வெறுக் கிறார்கள். கிறிஸ்துவமோ, இஸ்லாமோ சமத்துவத்தை பேசியது. ஆனால் பெரியார் பேசிய சமத்துவம் வேறு, நீதிக் கட்சி கொடியையே திராவிடர் கழக கொடியாக வைத்துக் கொள்ளலாமே என்று கேட்ட போது, "அதில் தராசு சமமாக இருக்கிறது, இங்கு சமமாக தராசு இருக்க கூடாது. வஞ்சிக்கப் பட்டவன் தட்டில் தான் எடை அதிகமாக இருக்க வேண்டும்" என்று பெரியார் பேசினார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரியாக சிலர் வந்தனர். அதில் சென்னை மாகாண மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரியாக வந்தவர் W.R.கார்னிஷ். 1871இல் எடுக்கப்பட்டது. அதில்



அவர் ஒரு குறிப்பை எழுதினார்,

"இந்த நாட்டின் சிக்கல்கள் அனைத்தும் பார்ப்பனக் கண்ணாடி கொண்டு தான் பார்க்கப் படுகின்றன (Through medium of brahmin spectacles) எனவே சிக்கல்களை நம்மால் சரியாக புரிந்து கொள்ள முடிய வில்லை" என்று எழுதினார். மற்றொரு அதிகாரி, "இந்த நாட்டில் ஜாதி தான் ஒருவனுடைய வாழ்விடத்தை, உடையை, உணவை, பேசுகிற மொழியை இப்படி எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது" என்று 1901 மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரி எழுதினார்.

ஏன் 1931இல் இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன்ட் சர்ச்சில் 'Our duty in India' என்ற பேச்சில், "இன்றைய விடுதலைப் போராட்டம் என்பது பிரிட்டிஷார் என்ற இடத்தில் பிராமணர்களை உட்கார வைப்பது தான். இது நாட்டுக்கான விடுதலை அல்ல. (To substitute the Brahmin in the place of british)

> * *இஸ்லாமியர்களின் தேச பக்தியை பாராட்டிய சாவர்க்கார், பிற்காலத்தில் தான் வெறுப்பு அரசியலை கையிலெடுத்தார்.*
> * *காங்கிரஸ் சமூக சீர்திருத்த மாநாடு நடத்தினால் அந்த பந்தலை எரிப்பேன் என்றார் திலகர்.*
> * *முஸ்லீம் லீக் தொடங்கியதற்குப் பிறகும் ஜின்னா காங்கிரசிலேயே இருந்தார்.*

அப்படி ஒரு நிலை வந்துவிடுமேயானால் இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கக் கூடிய 65 மில்லியன் மக்கள் அழிந்தே போய் விடுவார்கள்" என்று அந்த பேச்சில் குறிப்பிட் டுள்ளார்.

இவற்றையெல்லாம் இணைத்துப் பார்த்தோம் என்றால் தான் நமக்கு புரியவரும். விடுதலை என்ற பெயரால் இங்கு என்ன நடந்தது என்பதைப் பார்த்தோமென்றால் இந்த ஆர்.எஸ்.எஸ் அமைப்பு என்ன செய்தது என்பது புரிய வரும்.

1858 - நவம்பர் 1 இல் தான் இந்தியாவில் அரசு என்ற ஒன்று முறையாக ஆட்சிக்கு வருகிறது. அதற்கு முன்பு வியாபார நிறுவனம் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது. அப்போது தான் விக்டோரியா பிரகடனம் வருகிறது. அதில் 'உங்கள் மதத்தில் நாங்கள் தலையிட மாட்டோம்' என்ற உறுதி மொழியை வாங்கி யிருந்தார்கள். ஏனென்றால் அரசோடு தொடர் புடையவர்களாகவும், ஆங்கிலம் பேசுபவர் களாகவும் பார்ப்பனர்கள் தான் இருந்தார்கள்.

இஸ்லாமியர்களை, முதலில் சாவர்க்கர் மிக உயர்வாக எழுதுகிறார். சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்பு தவிர்க்க முடியாதவை என்றும் எழுதுகிறார். இஸ்லாமிய தலைவர் இறந்ததற்கு பிரிட்டிஷ் மகிழ்ந்தது என்றும் எழுதுகிறார். 1909 வரை சாவர்க்கர் இப்படித் தான் இருந்தார். அவர் சிறைக்கு சென்ற பின்பு தான் மாறுகிறார். இஸ்லாமியர்கள் தீவிரமான பிரிட்டிஷ் வெறுப்பு கொண்டிருந்தார்கள், எந்தளவிற் கென்றால் ஆங்கிலம் கற்றுக் கொள்ள முடியாது என்று அறிவிக்கும் அளவிற்கு இஸ்லாமியர்கள் பிரிட்டிஷ் வெறுப்பு கொண்டிருந்தார்கள். ஆனால், இந்துக்கள் மிக இலாவகமாக ஆங்கிலம் கற்றுக் கொண்டு உயர் பதவிகளுக்கு சென்று விட்டார்கள். இந்தியாவில் பதவிக் காலம் முடிந்து இங்கிலாந்து சென்ற ரிப்பன் பிரபுவை வழியனுப்ப சென்றவர்கள் ஏன் இது போல் வருடந்தோறும் நாம் சந்திக்கக் கூடாது என்று முடிவெடுத்து ஆண்டுதோறும் (1884) சந்தித்தது தான் "Indian National Congress" இதில் அனைத்து தரப்பினரும் இருந்தனர். மதச் சார்பற்ற பார்ப்பனர்களும் இருந்தனர்.

கோகலே இருந்தார். அவர் சித்பவன் பார்ப்பனர் தான். ஆனால் பூணூலை அகற்றிவிட்ட பார்ப்பனர். இப்படி முற்போக்கு சிந்தனை கொண்டவர்கள் தான் காங்கிரசை தொடங்கினார்கள். எனவே காங்கிரசிற்கு சமுதாய மாற்றத்திற்கான சிந்தனையும் இருந்தது. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் சமுதாய சீர்திருத்தத்திற்கான மாநாடும்இணைந்தே நடத்தப்பட்டது. இது 1895 வரை மட்டும் தான் நடந்தது. 1895 மாநாட்டில் தான், "சமூக சீர்திருத்த மாநாடு இனி நடந்தால் பந்தலை தீ வைத்து எரிப்பேன்" என்று கூறினார். அப்போது தான் சமூக சீர்திருத்த மாநாடு காங்கிரசில் நின்று போய் விட்டது. ரௌலட் சட்டமே திலகரும் அவரது நண்பருமான சபேக்கர் சகோதரர்களை வைத்து தான் கொண்டு வரப்பட்டது. ஏனென்றால் இராணுவப் பள்ளியை நடத்தினார்கள். மூஞ்சே நடத்தியது பின்னால், ஆனால் அதற்கு முன்பே இவர்கள் இராணுவப் பள்ளியை நடத்தினார்கள். இந்துக்களின் உரிமையை பாதுகாக்க ஆயுதத்தை நாம் கையில் எடுக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர்கள். ரவுலட் அறிக்கை யில் இவற்றை காரணமாக குறிப்பிடுகிறார்கள். இப்படி ஓர் மூர்க்கத்தனமான பார்ப்பனராகத்தான் திலகர் இருந்தார். இவருக்கும் மன்னிப்புக் கடித வரலாறெல்லாம் உள்ளது.

காங்கிரசில் 1885 இலிருந்து 1914 வரை இருந்த முற்போக்காளர்களெல்லாம் முடிந்து போய் தான், இந்து பார்ப்பன மேலாதிக்கத்தை நிறுவுகிற பார்ப்பனர்களின் கையில் காங்கிரஸ் 1915 காலகட்டத்தில் சிக்குகிறது. சிறிது காலம் கழித்து மிதவாத இந்துத்துவ காந்தி வந்து விட்டார். முதலில் வந்தவர்கள் திலகரைப் போன்றவர்கள் தான் மிக மோசமான இந்துத்துவவாதிகளாக இருந்தார்கள். திலகரோடு நட்பு கொண்ட கூட்டம் தான் இந்து மகா சபை யையும் தொடங்குகிறார்கள்.

1870, 75களில் தான் மதக் கலவரங்கள் என்ற ஒன்றே தொடங்குகிறது. இஸ்லாமியர் இந்துக்கள் என்ற மோதலும் அப்போது தான் தொடங்குகிறது. தொடர்ச்சியாக இந்த மோதல்கள் 1910 வரை நடைபெறுகின்றன. அதில் இரண்டு நமது மாநிலத்திலும் நடைபெற்றது. ஒன்று, சேலம் மாவட்டமாக இருந்த பாலக்கோட்டில் 1880இல் கலவரம் நடைபெறுகிறது. 1882இல் சேலம் செவ்வாய் போட்டை பகுதியில் ஒரு மசூதி இடிக்கப்படு கிறது. இதை செய்தவர் யார் என்றால் ? பெரிய தலைவராக பின்னாட்களில் சொல்லப்பட்ட சி.விஜயராகவாச்சாரியார். காங்கிரஸ் சட்டங் களை அவர் தான் எழுதினார். பெரிய வழக்கறிஞர் என்று சொல்லப்பட்டவர், அவர் தான் மசூதி இடிப்புக்கு காரணமானவர் என்று 10 ஆண்டுகள் சிறை தண்டனையும் கொடுக்கப் படுகிறது. இப்படி இந்தியா முழுவதும் நடை பெற்றது. 1890 வரை காங்கிரசில் 25% இஸ்லாமியர்களாக இருந்தனர். அது 1905 இல் 5% ஆக குறைந்தது. ஏனென்றால் காங்கிரஸ் தலைவர்கள் தான் இந்து மத வெறியர்களாக நடந்து கொண்டார்கள்.1906இல் "முஸ்லிம் லீக்" தொடங்கப்படுகிறது. அப்போதும் முகமது அலி ஜின்னா காங்கிரசில் தான் இருந்தார்.

(தொடரும்)

தலையங்கம்

## புதுமைப் பெண்களே வருக!

“ஆசிரியர் பணிகளுக்கு பெண்களை மட்டுமே நியமிக்க வேண்டும்; அனைத்து கல்வி வேலை வாய்ப்பிலும் 50 சதவீத இடங்களைப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்; ஒரு வீட்டில் ஒரு பெண், ஒரு ஆண் குழந்தை இருந்தால் பெண் கல்விக்கே முன்னுரிமைத் தரப்பட வேண்டும்; பெண்களுக்கு சொத்து – வாரிசுரிமையில் சம பங்கு தர வேண்டும்” – இப்படி பெண்களின் விடுதலைக்ககாகக் குரல் கொடுத்த தலைவர் பெரியார். கலைஞர் முதல்வராக வந்த பிறகு, ஒவ்வொன்றாக செயல்படுத்தினார். இப்போது தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், அந்த சாதனை சரித்திரத்தைத் தொடருகிறார்.

6ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று, கல்லூரிகளில் அடி எடுத்து வைக்கும் பெண்களுக்கு அவர்களின் உயர்க் கல்வி வரை மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘புதுமைப் பெண் திட்டம்’ பெண் விடுதலைக்கான பாதையில் மற்றொரு மைல் கல். தி.மு.க. ஆட்சியின் சாதனை மகுடத்தில் பதிக்கப்பட்ட வைரம். நாட்டில் எங்கும் நிகழ்ந்திடாத சாதனை என்று டெல்லி முதல்வர் கெஜ்ரிவால், மனம் திறந்து பாராட்டியிருக்கிறார். ‘எனது வாழ்க்கையில் மகிழ்ச்சியான தருணம்’ என்று முதல்வர் உணர்வுகளைப் பகிர்ந்திருக்கிறார்.

‘சனாதனத்தின்’ பெண்ணடிமை கோட்பாடுகளை சவக்குழிக்கு அனுப்பியுள்ள திட்டம் இது. ‘சூத்திரர்களுக்கு’ கல்வியைத் தராதே என்று தடைபோட்ட சனாதன தர்மத்தின் நீதி நூலான மனுதர்மம், பெண்கள் அனைவரும் ‘சூத்திரர்’களே என்று எழுதி வைத்தது (“ஸ்திரீனாந்த சூத்திர ஜாதினாம்”).

கணவனை இழந்த பெண்கள் உயிர் வாழவே கூடாது; நெருப்பில் எரிக்க வேண்டும் (“சிதா வாரோகணம் பிரம்மச்சர்யம்”) என்று அதே மனுசாஸ்திரம் கூறுகிறது. பெண்களும் சூத்திரர்களும் வேதம் ஓதக் கூடாது (“நாஸ்த்ரீ சூத்ர வேதமாத்யதாம்”) என்று தடை போட்டது. இந்த மனு சாஸ்திரம் இப்போதும் அச்சிட்டு விற்பனையாகிறது. தடை ஏதும் இல்லை. மனுதர்மத்தை எரிப்பது பாவம் என்று பார்ப்பன “மதுவந்திகள்” இப்போதும் சமூக வலைதளங் களில் பேசி வருகிறார்கள். ஒவ்வொரு ‘பார்ப்பனர் பூணூலும்’ நான் மனுதர்மப்படி ‘பிராமணன்’ என்பதை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இவையெல்லாம் பாரத தேசத்தின் ‘சனாதனப் பண்பாடு’ என்று பெருமை பேச ஆளுநர்கள் இருக்கிறார்கள். இதைத் தட்டிக் கேட்ட பெரியார் சிலையை உடைக்க வேண்டும் என்று திரைப்படத்தில் சண்டை போட்டு காமிராக்கள் முன் உதை வாங்கும் ஒரு நடிகர் பேசுகிறார்.

இந்த சமூகப் பின்னணியில் பெண் கல்விப் புரட்சியைப் பரிசீலிக்க வேண்டும்.

‘சமூக–கல்வி ரீதியாக’ பின் தங்கியவர்கள் பிற்படுத்தப்பட்டோர் என்று நமது ஆசான்கள் சட்டத்தில் சரியான வாசகங்களைப் பதித்து வைத்தனர்.

சமூகமும் கல்வியும் பிரிக்க முடியாத சமூக மாற்றத்தின் அடிப்படைக் கூறுகள். அத்தகையப் பிரிவினரை அறிவியல் பார்வையில் அடையாளம் காட்டும் சமூகக் காரணிகளாக விளங்குவோர் அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் படிக்கும் பெண்கள். இவர்களில் பார்ப்பனிய மேட்டுக்குடிப் பிரிவினரைக் கண்டுபிடிக்கவே முடியாது.

இத்திட்டத்தில் பயன் பெறக்கூடியவர்கள் யார்? அன்றாடம் வேலை செய்துதான் வாழ்க்கையை ஓட்டியாக வேண்டும் என்ற வாழ் நிலையில் தள்ளப்பட்டுள்ள தாய்மார்கள் பெற்ற பெண்கள்; இந்த மாணவிகள் அரசு வழங்கிய சைக்கிளில் பயணிப்பவர்கள்; அரசு வழங்கிய சீருடை பாட நூல்களோடு பள்ளிக்கு வருகிறவர்கள்; அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிப்பவர்கள்; சுயமரியாதையுடன் பெருமைகளைச் சுமந்து அவர்கள் கல்லூரி வளாகத்துக்குள் வருகிறார்கள். இதற்குப் பெயர் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய சமூக நீதி; சுருக்கமாக ‘திராவிட மாடல்’.

இந்தப் பயன் எப்போது முழுமை பெறும்? கல்லூரிப் படிப்புக்குப் பிறகு இந்தப் பெண்கள் குடும்ப அமைப்புக்குள் சிக்கி குழந்தைகளைப் பெற்றுத் தரும் எந்திரங்களாக மாற்றும் சமூக நிலையை மாற்றியமைக்கப்படும்போது தான் பெண் கல்வி இப்போது பல நடுத்தர மேல் நடுத்தர குடும்பங்களின் ‘அடையாளத்துக்கான பெருமை’யாகவே பார்க்கப்படுகிறது. பெண்கள் இதை மறுத்து தங்கள் படிப்புக்குப் பிறகு அறிவை ஆற்றலை வெளிப்படுத்தும் பதவிகளுக்கு வர வேண்டும். திருமணம் என்பது ஒருதடையாக வந்தால் அதையும் மீறி நிற்கும் துணிவைப் பெற வேண்டும். அத்தகைய துணிவான மாற்றங்கள் இப்போது படித்த பெண்களிடம் வெளிப்படத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்க மாற்றம்.

உயர்கல்வியில் தமிழகம் வளர்ச்சி பெற்றாலும் உழைப்புச் சந்தையில் பெண்களின் பங்கு குறைந்து வருவதும், அவர்கள் கற்ற கல்வி, குழந்தைகள் பராமரிப்போடு முடங்குவதும் கவலைக்குரிய நிலையாகும். எனவே புதுமைப் பெண்களின் சுயமரியாதைக்கான அடையாளம், அதிகார மய்யங்களில் அமர்வதிலும் நாட்டை வழி நடத்துவதிலும் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இத்தகைய மாற்றத்துக்கு முன் வரும் பெண்களை முற்போக்கு சிந்தனையாளர்கள் ஊக்கப்படுத்திட வேண்டும். மாறாக சமூக மனநிலையில் நம்மையும் பொருத்திக் கொண்டு “எப்போது திருமணம்? என்ற கேள்வியையும், திருமணத்துக்குப் பிறகு “எப்போது நல்ல சேதி தரப் போகிறாய்?” என்ற கேள்வியையும் கேட்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். ‘புதுமைப் பெண்கள்’ வரலாறு படைக்க வழி திறந்து விட வேண்டும்; புதுமைப் பெண்களின் வெற்றி அதில் தான் அடங்கி இருக்கிறது.

# ஜே.என்.யு. துணைவேந்தரின் சனாதன எதிர்ப்பு முழக்கம்

## பெண்கள் அனைவருமே ‘சூத்திரர்கள்’ என்று இழிவுபடுத்துகிறது மனுதர்மம்

பெண்கள் அனைவரும் சூத்திரர்கள் என்று இழிவுபடுத்துகிறது மனுதர்மம் என்றும் ஜாதி ஒழிப்பே ஆரோக்கியமான சமூகம் என்றும் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத் துணை வேந்தர் சாந்திஸ்ரீ பண்டிட் கூறியுள்ளர்.

மானுடவியல் என்பது அறிவியல் பூர்வமானது. நமது கடவுள்களின் ஆதிமூலத்தை தேடிப் பார்த்தால், எந்த ஒரு கடவுளுமே பிராமணர் கிடையாது என்பது தெரிய வரும். சிவபெருமான் ஒரு தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர். பாம்புடன் சுடுகாட்டில் அமர்ந்திருப்பவர்தான் சிவபெருமான். சிவபெருமானுக்கு ஆடை என்பது குறைவுதான். பிராமணர்கள் சுடுகாட்டில் அமருவார்கள் என நான் நினைக்கவில்லை.

கடவுளர்களின் மானுடவியலை பார்த்தால் உயர்சாதி என்பதில் இருந்து எந்தக் கடவுளும் வந்தது இல்லை. லட்சுமி, சக்தி என அத்தனை கடவுள்களுமே உயர்சாதி இல்லை. ஜெகநாதரை எடுத்துக் கொண்டால் அவரும் பழங்குடியாகவே இருக்க வேண்டும். இப்படியான நிலையில் ஏன் நாம் பாகுபாட்டுடன் இருக்கிறோம்? இது மனிதநேயமற்றது. மனுஸ்மிருதியானது அனைத்து பெண்களையும் சூத்திரர்கள் என்கிறது. மனுஸ்மிருதி என்பது மிக மிக பிற்போக்கானது. மனுஸ்மிருதியின் அடிப்படை யில் ஒரு பெண் தன்னை பிராம ணர் என்றோ அல்லது வேறு எதன் பெயரிலோ உரிமை கொண்டாடி விட முடியாது. உங்களை சூத்திரர் என்கிறது மனுஸ்மிருதி. அந்தப் பெண் திருமணம் செய்து கொண்டால் கணவரின் சாதி அல்லது அப்பாவின் சாதிதான் உங்களுடையதாகிறது. இது மிகவும் பிற்போக்கானது.

பிறப்பின் அடிப்படையிலானது சாதி அல்ல என பலரும் கூறுகின்ற னர். ஆனால் சமூகத்தில் பிறப்பின் அடிப்படையில்தான் சாதி தீர்மானிக்கப்படுகிறது. பிராமணரோ அல்லது வேறு ஒரு சாதியை சேர்ந்தவரோ தலித் ஆகமுடியுமா? அண்மையில் இராஜஸ்தானில் 9 வயது தலித் சிறுவன், குடிநீர் பானையை தொட்ட ஒரே காரணத்துக்காக அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார். அந்த குடிநீரை குடிக்கக்கூட இல்லை. நம்முடைய மனிதாபிமானம் எங்கே நிற்கிறது என யோசித்துப் பாருங்கள்? சக மனிதனை நாம் எப்படி நடத்துகிறோம் என்பதை நினைத்துப் பாருங்கள். இந்தியச் சமூகமானது ஆரோக்கியமானதாக இருக்க வேண்டுமானால் சாதி ஒழிப்பு என்பது அதிமுக்கியமானதாகும். சாதி என்ற செயற்கையாக கட்டமைக்கப்பட்ட ஒன்றின் பெயரால் சக மனிதனைக் கொலை செய்யவும் நாம் தயாராக இருக்கிறோம். இந்திய நாகரிகத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதை பவுத்தம் காட்டுகிறது. கருத்து வேறுபாடு, பன்முகத் தன்மை மற்றும் வேறுபாட்டை இந்திய நாகரிகம் ஏற்றுக்கொள்கிறது என்பதை நிரூபிப்பதால், பவுத்தம் மிகப் பெரிய மதங்களில் ஒன்று என்று நான் நினைக்கிறேன். புத்த மதம், பிராமண இந்துயிசத்துக்கு எதிரானது. புத்தர் இந்திய வரலாற்றில் முதல் பகுத்தறிவாளர். அதற்கு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் புத்துயிர் ஊட்டினார். இவ்வாறு சாந்திஸ்ரீ பண்டிட் பேசியுள்ளார்.

## பெரியார் பிறந்தநாள்; சனாதனத்தை வேரறுக்க உறுதி ஏற்போம்!

அது என்ன ‘சனாதனம்’? வர்ணாஸ்ரம தர்மத்தின் மற்றொரு பெயர் தான் அது! மனு சாஸ்திரம், இறந்து போன மூத்த சங்கராச்சாரி, இந்துக்களின் புனித நூல்கள் எல்லாம் இதைத் தான் கூறுகின்றன.

பிறப்பால் ஒருவன் ‘பிராமணன்’ - அவனுக்கு அடிமை, பெரும்பான்மை உழைக்கும் மக்களான சூத்திரர்கள், பஞ்சமர்கள் மற்றும் பெண்கள். இது பிரம்மாவே கூறியது என்று மனுதர்மம் கூறுகிறது.

அந்த சனாதனம், இப்போது பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி என்று அதிகார பலத்துடன் தமிழர்களாகிய நம்மீது படை எடுத்து வருகிறது.

மொழி, இன அடையாளங்களை ஒழிக்க, மாநிலங்களையே இல்லாது ஆக்க நடக்கும் முயற்சி - சனாதனம்.

நீட் தேர்வைத் திணிப்பது - சனாதனம்.

காசியை தலைநகராக்கி, மனுதர்மத்தை அரசியல் சட்டமாக்கி இஸ்லாமிய, கிறிஸ்துவ மக்களின் வாக்குரிமையைப் பறிப்போம் என்று சாமியார்கள் கூட்டம் வாரணாசியில் கூடி இந்துராஷ்டிரத்துக்கு புதிய அரசியல் சட்டத்தை அறிவித்திருக்கிறதே - அது சனாதனம்.

தமிழ்நாட்டிடமிருந்து ஒரு ரூபாயை வாங்கி 35 காசுகளை மட்டுமே திருப்பித் தருகிறதே ஒன்றிய ஆட்சி - அது சனாதனம்.

அனைத்து இந்துக்களும் சமம் ஆக முடியாது; ‘பிராமணர்’ கட்டுப்பாட்டிலுள்ள கோயிலில் பிற ஜாதி இந்துக்கள் அர்ச்சகராக முடியாது என்று நீதிமன்றத்தில் இப்போதும் படி ஏறுகிறார்களே - அது சனாதனம்.

கார்ப்பரேட்டுகளுக்கு 5 இலட்சம் கோடி வரிச் சலுகை; அதே நேரத்தில் விளிம்பு நிலை எளிய இந்துக்களுக்கு பெட்ரோல், டீசல், கேஸ் விலையை ஏற்றிக் கொண்டிருக்கிறார்களே - அது சனாதனம்.

ஸ்வயம் சேவக்குகளாக ஆர்.எஸ்.எஸ் - இல் பெண்கள் உறுப்பினர் ஆக முடியாது என்று இன்று வரை தடை போட்டிருக்கிறார்களே - அது சனாதனம்.

சரிபாதியாக இருக்கும் இந்துப் பெண்கள் தெய்வ பக்தி இருந்தாலும் கோயில் அர்ச்சகராக, சடங்குகளில் பங்கேற்க, முடியாதவர்களாக தடைபோட்டு வைத்திருக்கிறார்களே - அது சனாதனம்.

மாட்டுக் கறி சாப்பிடாதே; மதம் மாறினால் சிறை; இஸ்லாமியருக்கு குடியுரிமை மறுப்பு; நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் மறுப்பு - இவை எல்லாமுமே சனாதனம்.

தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியைக் கவிழ்த்து, குதிரை பேரம் பேசித் தங்களது ஆட்சியாக மாற்றுவது, ஆளுநர்களை அரசியல் முறைகேடுகளுக்குப் பயன்படுத்துவது - சனாதனம்.

ஜாதி கட்டாயம் வேண்டும் என்பதோடு, ஜாதி ஒழிப்பு பற்றி கள்ள மவுனம் சாதிப்பது - சனாதனம்.

‘பிராமணன்’ என்றால் ஒழுக்கமானவன்; குஜராத்தில் கூட்டுப் பாலியல் செய்தாலும் 14 பேரைக் கொலை செய்தாலும், "பிராமணன் ஒழுக்கமானவன்" - முன்கூட்டியே சிறையிலிந்து விடுதலை செய்வோம் என்கிறார்களே - அது சனாதனம்.

பணமதிப்பு இழப்பு - ஜி.எஸ்.டி. வரி விதிப்பு - காஷ்மீர் தனி உரிமை அழிப்பு - விவசாயிகளுக்குத் துரோகம்; மின்சார உரிமையை மாநிலங்களிலிருந்து பறித்தல்; - அமுலாக்கத் துறை - சி.பி.அய். அமைப்புகளைப் பழி வாங்கப் பயன்படுத்துதல் - ‘சனாதனம்’.

பெரியார் சிலையை உடைப்பது; வன்முறையாளர்களை, கிரிமினல் குற்றவாளிகளை கட்சி உறுப்பினர்களாக்கி ’இந்துத்துவா’ படம் காட்டும் மோசடி வித்தை - சனாதனம்.

ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தும் வர்ணாஸ்ரமமே - சனாதனம்.

பெரியார் மண்ணில் சனாதனத்தை வீழ்த்த உறுதியேற்போம்! பார்ப்பனிய பாசிசத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க சூளுரைப்போம்! வாரீர்!

**– கழகம் வெளியிட்ட துண்டறிக்கை**

## உ.பி.பார்ப்பன சீர்திருத்தவாதி சச்சிதானந்தின் வரலாற்றுப் பதிவுகள்

# சென்னை மாகாணத்தில் தலைவிரித்தாடிய ஜாதிக் கொடுமைகள்

*சென்னை மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றுவதற்கான சூழலையும், தலைவிரித்தாடிய பார்ப்பன ஜாதிய ஆதிக்க வெறியையும் அக்காலத்தில் சென்னையில் தங்கிப் படித்த உ.பி. பார்ப்பன சீர்திருத்த சிந்தனையாளர் சச்சிதானந்த் நூலாக பதிவு செய்துள்ளார்.*

பார்ப்பனிய கொடுமைகளை தோலுரித்த பார்ப்பனர்-அக்யேயாவின் நினைவுப் பக்கங்களில் இருந்து சில குறிப்புகள்:


சச்சிதானந்த ஹீரானந்த் வாத்சுயாயன் கவிஞர், பத்திரிகையாளர், புதின எழுத்தாளர் என பன்முகத் தன்மை கொண்டவர். 1911ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேசத்தில் பஞ்சாபி பிராமண குடும்பத்தில் பிறந்த இவர் 1987ஆம் ஆண்டிலேயே காலமாகிவிட்டார். பகத் சிங், சந்திரசேகர ஆசாத், சுகதேவ், யாஷ்பாலுடன் தலைமறைவாக இருந்து ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்ட இவர், பயணக் கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள், நினைவுக் கட்டுரைகள் எண்ணற்றவற்றை எழுதியுள்ளார். அதில் மிகக் குறிப்பிடத்தக்க குறிப்புகள் அவர் சென்னையில் கல்லூரி படித்த காலம் குறித்து எழுதியவை.

பார்ப்பன குடும்பத்தில் பிறந்த அவர், கல்லூரி காலத்தில் சென்னையில் தங்கியிருந்தபோது பார்ப்பனர்கள் பிற சமூகத்தினர் மீது திணித்த சமூக அநீதிகளைக் கண்டு கொந்தளித்து, அவர்களிடம் இருந்து விலகி, பொது சமூகத்தோடு கலந்துறவாடியதையும், அந்த காலகட்டத்தில் நிலவிய பார்ப்பனியக் கொடுமைகளையும் தனது எழுத்துக்களில் பதிவு செய்துள்ளார். அக்யேயா என்ற புனைப்பெயரில் அழைக்கப்பட்ட இவரை குறித்து அக்சயா முகுல் என்பவர் 2022-இல் நூல் ஒன்றை எழுதியுள்ளார். “This excerpt is from Writer, Rebel, Soldier, Lover: The Many Lives of Agyeya” என்ற அந்த நூலில் இருந்து சச்சிதானந்தின் கல்லூரி காலம் குறித்து இடம் பெற்றிருக்கும் சில முக்கியப் பகுதிகளை இந்த கட்டுரையில் காணலாம்.

1920ஆம் ஆண்டில்தான் செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் மூலம் இந்தியாவில் இரட்டை ஆட்சி முறை அமலுக்கு வந்தது. அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒத்துழையாமை இயக்கம் வேகம் பெற்றது. காந்தியின் செயல்பாடுகளும் அதிகரிக்கத் தொடங்கியது. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான தேசிய இயக்கத்தில் முன்னணியில் காங்கிரஸ் அப்போது இருந்தாலும் ஜாதியம் பற்றிய அதன் தெளிவற்ற பார்வை, தேர்தல் புறக்கணிப்பு ஆகியவற்றால் மெட்ராஸ் மாகாணத்தில் ஓர் நெருக்கடியை சந்தித்தது.

சமூகப் புரட்சியாளர் பெரியார் காங்கிரஸ் கட்சியிலும், பொது அரசியலிலும் பார்ப்பனிய மேலாதிக்கத்தை தகர்க்க பெரும் சவாலோடு இயக்கத்தை முன்னெடுத்தார். பார்ப்பனர் அல்லாதோருக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் தீர்மானங்களை பெரியார் வலியுறுத்தியதால் காங்கிரசுடன் பிளவு ஏற்பட்டு சுயமரியாதை இயக்கம் கண்டார். கடவுள், மதம், காந்தி, காங்கிரஸ், பார்ப்பனிய எதிர்ப்பால் தமிழ்நாட்டின் சமூக அரசியலில் ஆதிக்கம் செலுத்த தொடங்கினார் பெரியார்.

இந்த காலகட்டத்தில்தான், அதவாது 1925 ஆம் ஆண்டு, தனது 14 வயதில் சென்னைக்கு வந்தார் சச்சிதானந்த். மெட்ராஸ் கிறிஸ்தவ கல்லூரியில் அறிவியல் துறையில் இடைநிலை பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக அவர் சென்னை வந்தார். அந்த சமயத்தில் மாணவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளால் அணி திரட்டப்பட்டது கல்லூரி நிர்வாகத்திற்கு அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. சச்சிதானந்தின் முதல் 2 ஆண்டு கல்லூரி படிப்பில் சாதி மத அரசியல் தொடர்பான பெரும் எழுச்சிகள் எதுவும் நடைபெறவில்லை.




எனினும் பல சிறிய சம்பவங்கள் பார்ப்பனராக அவருக்கு கிடைக்கும் சிறப்புரிமைகள் பற்றிய அனுபவங்களை முதன்முதலில் உணர்த்தின. பிராமணிய அடையாளத்தை சச்சிதானந்தாவின் தந்தை வீட்டிலேயே திணித்தார். ஆனால் மெட்ராஸ் கிறிஸ்தவ கல்லூரியில் சச்சிதானந்தா கண்ட ஜாதிய பிரிவினை அவருக்கு விரும்பத்தகாததாக இருந்தது.

இவர் தம்பு செட்டி தெருவில் உள்ள விடுதியில் 46 மாணவர்களுடன் தங்கியிருந்தார். அனைவருமே பார்ப்பனர்கள். பார்ப்பனர்கள் மட்டுமே தங்கக்கூடிய விடுதி அது. கல்லூரி காலத்தில் இவருக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டு டென்னிஸ். வளாகத்தில் பார்ப்பனர்கள் மற்றும் பார்ப்பனர்கள் அல்லாத மாணவர்கள் என அனைத்துத் தரப்பினருமே இணைந்து டென்னிஸ் விளையாடினர். ஆசிரியர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்கள். விளையாட்டின்போது கீழ் ஜாதி மாணவர்களுடன் பார்ப்பன மாணவர்கள் கை குலுக்கிக் கொண்ட பின்னர் மறாக்காமல் கை கழுவிக் கொள்வர். பார்ப்பன மாணவர்கள் உணவு உண்ணும்போது அங்கு கீழ் ஜாதி மாணவர்கள் வந்துவிட்டால், அந்த உணவை நாய் தீண்டியதைப் போல கருதி, உண்ணுவதை நிறுத்திவிட்டு எழுந்துவிடுவார்கள். இதனை கண்டு சகித்துக்கொள்ள முடியவில்லை என சச்சிதானந்த் குறிப்பிடுகிறார்.

**சென்னை கிறிஸ்துவ கல்லூரி வளாகத்தில் பார்ப்பனர்கள் மற்றும் பார்ப்பனர்கள் அல்லாத மாணவர்கள் என அனைத்துத் தரப்பினருமே இணைந்து டென்னிஸ் விளையாடினர். ஆசிரியர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்கள். விளையாட்டின்போது கீழ் ஜாதி மாணவர்களுடன் பார்ப்பன மாணவர்கள் கை குலுக்கிக் கொண்ட பின்னர் மறாக்காமல் கை கழுவிக் கொள்வர். பார்ப்பன மாணவர்கள் உணவு உண்ணும்போது அங்கு கீழ் ஜாதி மாணவர்கள் வந்துவிட்டால், அந்த உணவை நாய் தீண்டியதைப் போல கருதி, உண்ணுவதை நிறுத்திவிட்டு எழுந்துவிடுவார்கள்.**

விடுதியில் சூழல் மெல்ல மேம்பட்டாலும் 2 மாதங்களுக்குப் பிறகு சச்சிதானந்தா அங்கிருந்து வெளியேற முடிவு செய்தார். அங்கு தங்குவதற்கான உரிமை இருந்தபோதிலும், துளியும் விருப்பம் இன்றி வெளியேற முடிவெடுத்ததாக சச்சிதானந்த் கூறுகிறார். ஜாதி வெறி பிடிக்காத வேறொரு விடுதிக்கு செல்ல விரும்பியதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

அங்கிருந்து வெளியேறிய சச்சிதானந்த் 1919-இல் கட்டப்பட்ட கல்லூரி பூங்கா விடுதிக்கு மாறினார். கல்லூரியில் இருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் அந்த விடுதி இருந்தது. விடுதியை கட்டியவர் கல்லூரியின் நான்காவது முதல்வரான வில்லியம் மில்லர். இவர் 2 விடுதிகளை உருவாக்கினார். பார்ப்பனர்கள் மற்றும் பார்ப்பனரல்லாதோர் இணைந்து தங்குவதற்கான விடுதி ஒன்று. மற்றொன்று கிறிஸ்தவ மாணவர்களுக்கான தனி விடுதி. விடுதிகள் இரண்டுதான் என்றாலும் உணவுக் கூடங்கள் மூன்று இருந்தன. பார்ப்பனர்களுக்கு ஒன்று, கிறிஸ்தவர் களுக்கு ஒன்று, மற்ற ஜாதியினருக்கு ஒன்று இருந்தது. பார்ப்பனரல்லாதாருக்கான விடுதி மற்றும் உணவகத்தை தேர்ந்தெடுத்தார் சச்சிதானந்த். அது அவருக்கு இருவகையில் மகிழ்ச்சிகரமாய் அமைந்தது. ஒன்று, ஜாதிய வெறியர்களை அங்கு தவிர்க்க முடிந்தது. மற்றொன்று தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்டவர்களோடு தோளோடு தோள் சேர்ந்து உறவாடவும், அவர்களோடு தட்டுகளை பரிமாறிக் கொள்ளவும் வாய்ப்பாக அமைந்தது.

புதிய விடுதியின் தளர்வான சூழல் நிம்மதியாக இருந்தது என எழுதினார் சச்சிதானந்த். “எல்லோரும் இகழ்ந்தவர்களிடையே நான் வாழ வேண்டும், அவர்களில் ஒருவனாக இருக்க வேண்டும், அவர்களில் இருந்து வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் நண்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்” என விரும்பியதாக அவர் குறிப்பிடுகிறார். பிறப்பில் இருந்தே சைவ உணவுகளை மட்டுமே உண்டு பழகியவரான சச்சிதானந்த் அங்கு இறைச்சி உணவுகளையும் உண்ணப் பழகிக் கொண்டார்.

கல்லூரிக்குள் மட்டும் சச்சிதானந்த் பார்ப்பனிய மேலாதிக்கத்தை காணவில்லை. வெளியே எங்கு பார்த்தாலும் பார்ப்பனிய மேலாதிக்கம் மிக மோசமாக இருந்தது. மலபாரில் ஜாதிய வீரியம் எவ்வளவு கொடூரமாக இருந்தது என்ற கதைகளை கேட்டார். விடுமுறை கால பயணங்களின் போது, சில இடங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பொதுப் பாதைகளில் தடை விதிக்கப்பட்டிருந்ததை கண்டார். பாலங்கள் வழியே பயணிக்க பெரும்பாலும் உயர் ஜாதியினருக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டதால், தாழ்த்தப்பட்டவர்கள் ஆற்றை கடந்தே செல்ல வேண்டியிருந்த கொடுமைகளையும் கண்டார். பார்ப்பனர்கள் குடியிருக்கும் பகுதியில் பிறர் நிலம் வாங்க முடியாத சூழல் இருந்ததையும் தெரிந்து கொண்டார்.

ஒரு தாழ்த்தப்பட்டவர் சென்று கொண்டிருக்கும் போது பார்ப்பனர் அவ்வழியே வருவதை பார்த்துவிட்டால், கைகளை மேலே உயர்த்தி அசுத்தமானவன் வருகிறேன் என்றி கத்த வேண்டும். அதைப்பார்த்து அந்த பார்ப்பனர் அருகில் வர மாட்டார் என்ற கொடுமைகள் எல்லாம் இருப்பதையும் பார்த்ததாக சச்சிதானந்த் குறிப்பிடுகிறார்.

சச்சிதானந்தின் ஒருமுறை பயணத்தின்போது, தங்கியிருந்த இடத்திற்கு அருகில் சாலையோரம் முனகல் சத்தம் வருவதை கேட்டுள்ளார். ரத்த காயங்களுடன் உயிருக்குப் போராடிய அப்பெண்ணை மீட்டு தங்கியிருந்த ஆர்ய சமாஜிற்கு அழைத்துச் சென்றார். மருத்துவ உதவிகள் அளித்தும், மறுநாள் காலையில் அப்பெண் உயிரிழந்தார். கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டதால் அப்பெண் உயிரிழந்துள்ளார். கொலைக்கான காரணம் என்னவென்று அப்போது தெரியவில்லை. ஆனால் அப்பெண்ணின் பெயர் அவரின் ஜாதியை தெரியவைத்தது.

பின்னாளில் கொலைக்கான காரணம் குறித்து யூகித்த அவர், பார்ப்பனர்களே அடித்துக் கொன்றிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருகிறார். தாழ்த்தப்பட்டவரின் அருகில் சென்றாலே தீட்டு என்றால், அந்த பெண்ணை அடித்துக்கொல்ல எத்தனை பார்ப்பனர்கள் அருகே சென்று அடித்திருப்பார்கள், அப்போது தீட்டாகவில்லையா என்றும் அவர் கேள்வி எழுப்பிக்கொண்டார்.

சென்னையில் கல்லூரி படித்த காலம் சச்சிதானந்திற்கு, ஜாதிய கட்டமைப்பு பற்றிய மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சென்னையில் அவருக்கு கிடைத்த உன்னதமான, நீடித்த நட்புகளை குறித்தும் அவர் பதிவு செய்துள்ளார். அந்த நட்புகள் தனது கொள்கைகளுக்கு ஊட்டமளித்தன, ஜாதியம் குறித்து எழுத வைத்தன என்றும் அவர் குறிப்பிடுகிறார். “எப்போதாவது ஒரு பெரும் வன்முறையிலோ அல்லது பேரெழுச்சியிலோ ஜாதியும் மதமும் செத்துவிடும், சகோதரத்துவம் எழும்” என்ற நம்பிக்கையையும் அவர் தனது எழுத்துக்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

பெரியார் காங்கிரஸை விட்டு வெளியேறி ஏன் சுயமரியாதை இயக்கம் கண்டார்? பார்ப்பனரல்லா தோரின் விடுதலைக்காக ஏன் வாழ் நாளெல்லாம் ஓடி உழைத்தார்? அன்றைய காலகட்டத்தில் பார்ப்பனியம் எவ்வளவு வீரியத்தோடு ஜாதிய நஞ்சை கக்கியது? என்றெல்லாம் புரிந்து கொள்ள ஒரு பார்ப்பனராய் சச்சிதானந்த் நேரடி சாட்சியம். பார்ப்பனியத்தின் கொரூரத்தை மற்றவர்கள் புரிந்துகொள்வதை விட பார்ப்பனர்கள் புரிந்துகொண்டு மனம் திருந்துவது வரலாற்றில் அரிதினும் அரிதாகவே நடந்திருக்கிறது. அதில் சச்சிதானந்தின் நேர்மை வரவேற்புக்குரியது.

**(தகவல்கள்: பிரண்ட்லைன் இதழ்)**
**தமிழில் : ர. பிரகாஷ்**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கோபியில் 144 இடங்களில் கிராமப்புறப் பிரச்சாரம்



ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் மாதாந்திர கலந்துரையாடல் கூட்டம் 4.09.2022 ஞாயிறு காலை 10 மணியளவில் கோபியில் நாகப்பன் இல்லத்தில் நடைபெற்றது. அலிங்கியம் பகுதி செந்தில்குமார் தலைமை ஏற்க மாவட்ட செயலாளர் வேணுகோபால், கழகத்தின் வெளீயீட்டு செயலாளர் இராம இளங்கோவன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் பெரியார் பிறந்தநாள் நிகழ்வுகள் பற்றி கலந்து ஆலோசிக்கப் பட்டது.

1. செப்.17 தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவினை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய பகுதிகளில் சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது.
2. பெரியரின் 144 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு மாவட்ட கழகத்தின் சார்பில் சனாதனத்தை வேரறுப்போம் என்ற தலைப்பில் 144 இடங்களில் கிராமப்புறப் பிரச்சாரப் பயணம் நடத்துவது எனவும், அதன் இறுதியில் நிறைவுவிழா பொதுகூட்டம் சத்தி அல்லது நம்பியூரில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தின் ஒன்றிய,நகர ,கிளை பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# பெரியார் பிறந்த நாள் கூட்டம் : சென்னை கழகத்தின் பணி






“சனாதனத்தை வேரறுக்க உறுதியேற்போம்” என்ற தலைப்பில் தந்தை பெரியார் பிறந்தநாள் பொதுக் கூட்டம், 17.09.2022 சனிக்கிழமை அன்று சென்னை, இராயப்பேட்டை, இலாயிட்ஸ் சாலை, பி.எம்.தர்கா அருகில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு, புரசைவாக்கம், திருவல்லிக்கேணி, ஆதம் மார்கெட், அய்ஸ் ஹவுஸ் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக வீதி வீதியாக கடை வசூல் சென்னை கழகத் தோழர் களால் துண்டறிக்கை கொடுக்கப்பட்டு கடை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

வணிகர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் ஆர்வத்துடன் நன்கொடைகளை வழங்கி வருகின்றனர். மேலும், கூட்டத்திற்கு திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை சுற்றிய பகுதிகளில் 10க்கும் மேற்பட்ட இடங்களில் சுவரெழுத்து எழுதப்பட் டுள்ளது. தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார் சுவரெழுத்துப் பணிகளை மேற்கொண்டார்.

# திராவிட மாடல் பயிற்சி பாசறையில் கொளத்தூர் மணி தொடர் உரை

திமுக இளைஞர் அணி சார்பில் “திராவிட மாடல் பயிற்சிப்பாசறை” தொடர்ச்சியாக தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. பாசறையில் திராவிட இயக்க வரலாறு , மாநில சுயாட்சி ஆகிய இரண்டு தலைப்புகளில் திராவிட இயக்கத் தலைவர்கள், ஆய்வாளர்கள் உரையாற்றி வருகின்றனர்.

இதில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிட இயக்க வரலாறு, தலைப்பில் 12.08.2022 அன்று கோவையில் சூலூர், கிணத்துக் கடவு, 17.08.2022 அன்று திண்டிவனத்திலும், 03.09.2022 அன்று திருச்சி துறையூர், மணச்சநல்லூரிலும் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றி வருகிறார்.

# மேட்டூர் கழக முயற்சி வெற்றி: திடீர் விநாயகர் சிலை அகற்றப்பட்டது

இந்து முன்னணியினரால் மேட்டூர் பேருந்து நிலையத்திற்கு எதிராக நீதிமன்றம், அரசு உத்தரவுகளை மீறி திடீரென வைக்கப்பட்ட வினாயகர் சிலை மேட்டூர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் முயற்சியால் அகற்றப்பட்டது

29.08.2022 காலை 11.00 மணியளவில் இந்து முன்னணியின் சேலம் கோட்ட செயலாளர் பழனிசாமி மற்றும் மேட்டூர் நகர இந்து முன்னணித் தலைவர் தமிழ்ச் செல்வன் சேர்ந்து மேட்டூர் பேருந்து நிலையத்திற்கு எதிரில் முறையாக அனுமதி எதுவும் பெறாமல் திடீரென ஒரு வினாயகர் சிலையை வைத்தனர்.

நீதிமன்ற உத்தரவுகள்,அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை மீறியும், சுற்றுச் சூழல், நீர்நிலைகளை மாசுபடுத்தும் பிளாஸ்ட் ஆப் பாரிஸ் இரசாயன கலவையால் செய்யப்பட்ட அந்த சிலை போக்குவரத்திற்கு இடையூறாகவும் வைக்கப்பட் டிருந்தது.

தகவல் அறிந்து மேட்டூர் நகரத் தலைவர் செ. மார்ட்டின், மேட்டூர் காவல் ஆய்வாளருக்கு தொலைபேசியில் இச்செய்திகளை கூறி இதனால் சட்ட ஒழுங்கு பிரச்சனையும் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் அது உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

உடனடியாக மேட்டூர் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் துரித நடவடிக்கை எடுத்து சிலையை வைத்த இந்து முன்னணியைச் சேர்ந்த சேலம் கோட்ட செயலாளர் பழனிசாமியையே அந்த சிலையை எடுக்க வைத்து காவல் துறை மூலம் சிலைக்கு போடப்பட்ட மேற்கூரை பிரித்து எடுக்கப்பட்டுள்ளது. இச் செயலுக்காக இந்து முன்னணியினரை காவல்துறை எச்சரித்து அனுப்பியுள்ளது

மேட்டூர் காவல் துறை எடுத்த இந்த உடனடி நடவடிக்கையை மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகம் பாராட்டுகிறது.

# பெரியார் பிறந்த நாள்: திருப்பூர் தயாராகிறது

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் திருப்பூர் மாநகரில் பெரியார் பிறந்த நாள் நிகழ்ச்சிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் 30.08.2022 செவ்வாய் மாலை மாஸ்கோ நகரில் உள்ள மாதவன் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, கழக நிர்வாகிகள் மாதவன், முத்து, அய்யப்பன், மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

வரும் செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாள் அன்று கழகத்தின் சார்பில் அய்யா சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்பு நிகழ்வுக்கு தோழர்கள் திரளாக கலந்து கொள்வது எனவும்

செப்டம்பர் 18 ஞாயிற்றுகிழமை அன்று கீழ்கண்ட இடங்களில் தெருமுனை கூட்டங்கள் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

1) ராயபுரம், 2) மாஸ்கோ நகர், 3) ரங்கநாதபுரம், 4) பெரியார் காலனி, 5) அம்மாபாளையம், 6) ஆத்துப்பாளையம், 7)அனுப்பர்பாளையம், 8) சந்தைப்பேட்டை, 9) குளத்துப்பாளையம், 10) வீரபாண்டி பிரிவு.

# சென்னையில் பெரியார் பிறந்த நாள் பொதுக் கூட்டம்: “சனாதனத்தை வேரறுக்க உறுதியேற்போம்”

“சனாதனத்தை வேரறுக்க உறுதியேற்போம்” என்ற தலைப்பில் தந்தை பெரியார் பிறந்தநாள் பொதுக்கூட்டம்,17.09.2022 சனிக்கிழமை அன்று சென்னை, இராயப்பேட்டை, இலாயிட்ஸ் சாலை, பி.எம்.தர்கா அருகில் நடைபெற வுள்ளது.

கூட்டத்திற்கு, இரண்யா தலைமை வகிக்கிறார். கிருத்திகா வரவேற்று பேச வுள்ளார். தோழர்கள் தேன்மொழி, இரம்யா, யாழினி முன்னிலை வகிக்கின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகத்தின்பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், விசிக துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு, திமுக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் இராஜீவ் காந்தி ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

புதுவை விடுதலை கலைக் குழுவினரின் எழுச்சி இசையோடு நிகழ்வு கள் நடக்கும். இறுதியாக இசை இனியாள் நன்றி கூறுவார்.

## டுவிட்டரிலிருந்து...

இலவசமாக கிடைத்த ஜாதியை மட்டும் ஏன் எதிர்க்க மறுக்கிறார்கள்?

அதென்ன காசு கொடுத்து வாங்கியதா?

**– விடுதலை இராசேந்திரன்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 08th September 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN